# காஞ்சீபுரம் தேவப்பெருமாள் ஸந்நிதி விஷயம்

ஸ்ரீ உ. வே. திருமணி ஸ்ரீநிவாஸ வரதாசாரியார், நம்மாழ்வார் ஸந்நிதி
ஆதீன பரம்பரை மிராசுதார், தீர்த்த மிராசுதார்.

காஞ்சிபுரம் ஸ்ரீ தேவராஜ ஸ்வாமி தேவஸ்தானத்தில் அநாதி காலமாகத் தென்ஞசார்ய ஸம்ப்ரதாயஸ்தர் (தென் கலையார்)கள் அத்யாபக மிராசுக்குப் பாத்யப்பட்டவர்கள். 1711 ஆம் வருஷம் ஆத்தான் திருவேங்கடராமானுஜ ஜீயர் உடையார் பாளையத்திலிருந்து தேவப்பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து அவர் தர்ம கர்த்ருத்வம் வகித்து, மேற்படி தேவஸ்தானத்தில் ஸ்ரீசைலேச தயாபாத்ர தனியன் தொடங்கித் திவ்யப்பிரபந்த ஸேவாகாலம் ஸேவித்தும். தாதாசாரியர் அகங்களிலும் கூட ஸ்ரீசைலேசதயா பாத்ர தனியன் துடங்கித்தென்கலையார்களே திவ்யப் பிரபந்தம் சவித்தும் வந்தார்கள். இம்மாதிரி ஸேவித்துக் கொள்ளும்படி அந்தக்காலத்தில் எழுந்தருளியிருந்த லக்ஷ்மீ குமார தாதாசாரியர் என்பவர் தென்கலை ஆத்தான் ஜீயருக்கு ஓர் உடன்படிக்கை எழுதிக்கொடுத்திருக்கிறார்.

சில காலம் கழிந்தவாறே தென்கலையார்கள் இந்தக் கோவிலுக்கு அத்யாபக மிராசுக்கும் ஸ்ரீசைலேசதயாபாத்ரத் தனியன் சொல்வதற்கும் பாத்யதை இல்லையென்று சில கிளர்ச்சிகள் ஏற்பட்டுத் தென்கலையார்களே-இந்தத் தேவஸ்தானத்தில் உள்ள எல்லாச் சந்நிதிகளிலேயும் அத்யாபக மிராசுக்குப் பாத்யப்பட்டவர்கள் என்றும், சொல்லக்கூடிய உரிமை ஏக போக மென்றும் கோர்ட்டுத் தீர்மானங்கள் அநேகம் ஆகியிருக்கிறது.

பின்னிட்டுச் சில வருஷங்கள் கழித்து, இதே அத்யாபக விஷயமாய் தென்கலையார்கள் இந்தக் கோயிலிலும், இதைச் சேர்ந்த எல்லாச் சந்நிதிகளிலேயும் சொல்லக்கூடிய மிராசு பாத்யதை இல்லையென்றும், மணவாள மாமுனிகள் தனியன் (ஸ்ரீசைலேச தயாபாத்ரம்)வாழிதிருநாமம், ப்ரபந்தங்கள் சொல்லக்கூடாதென்றும், சிற்சில கிளர்ச்சிகள் அவ்வப்போது ஏற்பட்டும், அவ்வப்போது வியாஜ்யங்கள் ஏற்பட்டும், கோர்ட் தீர்மானங்களில் தென்கலையார்களே அத்யாபக மிராசுக்கு ஏகபோகபாத்யதை உள்ளவர்கள் என்றும், மணவாள மாமுனிகள் தனியன், ப்ரபந்தம் வாழிதிருநாமம் சொல்லக்கூடியவர்கள் என்றும், நித்யப்படியிலும், விசேஷ உத்ஸவங்களிலும், விசேஷ புறப்பாடு காலங்களிலேயும், எந்தக்காலத்திலும் இந்தத் தேவஸ்தானத்தில் சம்பந்தப்பட்ட எல்லா இடங்களிலும் சொல்லக்கூடிய ஏக போக பாத்யஸ்தர்கள் என்றும் தீர்மானம் ஆகியிருக்கிறது. (vide 1915 Madras Weekly Notes Page 281) 1939 (1. M. L. J. Page 134).

இந்தத் தேவஸ்தானத்தில் தென்கலையார்களுக்கு அத்யாபக மிராசுகள் தவிர மேலும் அனேக தீர்த்த மிராசுகள் தென்கலை என்றும், மல்ஜி மிராசு, அருளப்பாடு ஆசீர்வாதம் தென்கலை என்றும், அனேக தென்கலை திருமணிகள் தென்கலை ஆசாரமென்றும், முக்கியமாக ஆழ்வார் ஆசாரியர்கள் தென்கலையென்றும் கோர்ட்தீர்மானங்களினால் விளக்கப்பட்டிருக்கிறது (vide 23 M. L. J. Page 134).

காஞ்சீபுரத்தில் உள்ள எல்லாத் திவ்ய தேசங்களிலேயும் தென்கலையார்களே அத்

யாபக மிராசுக்கு ஏகபோகமாக பாத்யதை உடையவர்கள். தூப்புல் [வேதாந்த தேசிகன் ஸந்நிதியிலும் தென்கலேயார்களே அத்யாபக மிராசுக்குப் பாத்யப்பட்டவர்கள் என்றும், தமிழ் ப்ரபந்தங்கள் சொல்லக்கூடிய உரிமையுடையவர்கள் என்றும் ஹை கோர்ட்டாராலும், சீமை கோர்ட்டாராலும் இந்த மிராசு ஊர்ஜிதப் படுத்தப் பட்டிருக்கிறது. (Vide 1915 M Weekly Notes) நாளைக்கும் தூப்புல் வேதாந்த தேசிகன் புறப்பாடுகாலங்களிலும் வீதியில் தென்கலேயார்களே ஸ்ரீசைலேசதயா பாத்ரத் தனியன் தொடங்கித் திவ்யப்ரபந்தம் சேவித்து வருகிறார்கள்.

தென்கலே ஆசாரம்தான் ப்ராசீனம் என்றும், தென்கலேயார்கள் மிராசுக்குப் பாத்யப்பட்டவர்கள் என்றும், அநாதியாகத் தென்கலே வழிபாடு நடந்து வருகிறது என்றும், எல்லா இடங்களிலும் தென்கலே வழிபாடு என்றும் விசதமாக விளங்குகிறது. (Vide 1947 (I M L J page 159-P.C. திருப்பதி கேஸ்).

ஸ்ரீ தேவப்பெருமாள் ஸந்நிதியில் ப்ரதிதினமும் சாயங்காலம் எல்லாதிவ்ய தேசங்கள் போல் நித்யானுசந்தானம் ஸேவை நடந்துவருகிறது.

தேவப்பெருமாள் ஸந்நிதியில் மட்டும், நித்யப்படி காலே திருவாராதன காலத்தில் நாலாயிரக் க்ரமம் ஸேவித்து வருவது வெகு காலமாக வழக்கத்தில் உள்ளது. ஒவ்வொரு நாளும் தனியன் தொடங்கி நாலாயிர திவ்யப் ப்ரபந்தங்களின் தொடர்ச்சியாக 50 பாசுரம் ஸேவித்து வாழிதிருநாமத்துடன் முடிகிறது. இம்மாதிரியே தொடர்ந்து ஸேவித்து வருவதில் ஒருதரம் பூராவும் நாலாயிரப் ப்ரபந்தம் முடிவு ஆனதும் மறுபடியும் இம்மாதிரியே ஸேவித்து வருவது வழக்கமாகும். இந்தத் தொடர்ச்சி பெருமாள் புறப்பாடு காலங்களிலும் சேர்ந்தது.

பஞ்சபர்வ உத்ஸவாதிகள் பெருமாள் புறப்பாடு, தாயாருடன் சேர்ந்த புறப்பாடுகளிலும் பஞ்சபர்வஉத்ஸவ, நீங்கலாக நடக்கும் பெருமாள் , தாயார் சேர்ந்து நடக்கும் விசேஷ உத்ஸவ புறப்பாடு காலங்களிலும் மேல்கண்ட ரீதியாகவே நாலாயிரத் திவ்யப்ரபந்த ஸேவை தொடர்ச்சியாக நடந்துவரும். இம்மாதிரி ஸேவாகாலம் நடந்துவருவது இந்தஸந்நிதிக்குத் தனிப்பட்ட சிறப்பாகும், தவிர வெள்ளிக்கிழமை தனிப்பட்டு நடக்கும் பெருந்தேவித் தாயார் புறப்பாடு காலங்களில் சிறிய திருமடல் ஸேவிப்பது வழக்கம்.

வைசாகோத்ஸவத்தில் 2 வேளை புறப்பாடு (சப்ரஹம்ஸ, அம்ஸ, சூர்ய, கருட, வாநர, நாக, சந்திர, மோஹினி, ஆளு, சூர்ண, தந்த, ரத, துரக, ஆளும், புண்ய கோடிவிமானம்) காலங்களிலும், கடைநாள் வெட்டிவேர் சப்பரம் உத்ஸவ புறப்பாடு உள்பட பூர்த்தியாக ப்ரம்மோத்ஸவத்தில் நாலாயிரதிவ்ய ப்ரபந்தம் நாற்றாதியுடன் பூர்த்தியாகி அப்போது திருப்பல்லாண்டு தொடக்கமும் ஆகிற வழக்கம். இதுவும் தவிர பெரும்பாலும் ஆழ்வார் ஆசாரியர்கள் வருஷோத்ஸவங்களில் ஒருதரம் நாலாயிரம் ஸேவைபூர்த்தியாகும். அத்யயன உத்ஸவத்தில் (பகல் பத்து, ராப் பத்து உத்ஸவம்) ஒருதடவை நாலாயிரம் பூர்த்தியாகும். ஏறக்குறைய ஒருவருஷத்தில் 20 தடவைகள் நாலாயிரம் பூர்த்தியாக ஸேவிக்க நேரிடுகிறது.

ஒவ்வொரு ஆழ்வார் ஆசாரியர் சாற்றுமுறை காலங்களில் பெருமாள் புறப்பாடு உத்ஸவம் ஆனதும் ஆஸ்தானத்தில் ஸ்வப்ரபந்தங்கள் ஸேவித்து சாற்றுமுறை காலங்களில் நாலாயிர சாத்துமுறையும் ஸேவித்து வரு

வழக்கமாகும். எல்லா சாற்றுமுறைகளி லும் பெருமாள் எழுந்தருளிச்சாத்துமுறை நடப்பதும் தவிர ஷெ சாத்துமுறைகள் வெள்ளிக்கிழமைகளில் வருமானல் பெரு மாளுடன் தாயாரும் சேர்ந்து புறப்பாடு கண்டருளி ஸேவை சாத்துமுறை நடந்து வருவது தனிப்பட்ட சிறப்பாகும்.

எல்லா ஸந்நிதிகளிலும் தெப்ப உத்ஸ வம், தவன உத்ஸவம் பெருமாளுக்கு மட் டும் நடப்பதும் நவராத்ரி உத்ஸவம் தாயாருக்கு மட்டும் நடப்பதும் வழக்க மாகும். ஆனல் தேவப்பெருமாள் ஸந்நிதியில் இவ்வுத்ஸவங்களில் பெரு மாள் தாயார் இருவரும் சேர்ந்தே ப்ராசீனமாக நடந்துவருவது தனிச்சிறப்பு. ஆழ்வார் ஆசார்யாள் சாற்றுமுறை காலங்களில் பெருமாள் தனிப்பட்டு எழுந்தருளினாலும், வெள்ளிக் கிழமைகளில் சாத்துமுறை வருமானல் தாயாரும் சேர்ந்து எழுந்தருளினாலும் அந் தந்த ஆழ்வாராசார்யர்கள் (உபதேச ரத்தினமாலையில் வரும்) நான்பாட்டு ஸேவித்து வருவதும் வழக்கம். பஞ்சபர்வ உத்ஸவங்களிலும், சில விசேஷ உத்ஸவங் களிலும் ஸந்நிதி வீதி திருவடி கோயிலில் ஸேவை ஆரம்பிப்பது வழக்கம். மற்றும் மாடவீதி புறப்பாடு, பிரம்ம உத்ஸவம், இன்னும் சில விசேட உத்ஸவங்களில் வாஹன மண்டபத்தின் அருகே ஸேவை ஆரம்பிப்பது வழக்கம்.

'அருளாழிப் புட்கடவீர் அவர் வீதி ஒருநாள் என்று' என்ற பாசுர அனுகுண மாக வையங்கண்ட வைகாசி திருநாளில் கருடோத்ஸவதினம் ஆழ்வார் ப்ராகாரம் எழுந்தருளும்போது நம்மாழ்வார் ஸந்நிதி வாசலில் வாஹனத்துடன் பெருமாளை நிறுத்தி 'தொழுதெழு என்மனனே' என் கிற முத்திரையுடன் எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வாருக்குப் பெருமாளிடமிருந்து மாலை ஸாதித்து, ஸ்ரீசடகோபம் ஸாதிப் பது தனிப்பட்டு இந்த ஸந்நிதியில் ப்ராசீனமாக நடந்து வருவது விசேஷ மாகும்.

---